# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1960/66 - 2016 අප්‍රේල් මස 01 වැනි සිකුරාදා - 2016.04.01

*1960/66 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இ. ச. வா. 423 ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்கள்**

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 22 (4) ஆம் பிரிவின் அடிப்படை நியதிகளிலான அனுமதி**

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 44 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதிலுள்ள பிரிவு 22 (3) ஆம் மற்றும் பிரிவு 22 (4) இன் கீழ் எனக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் விதத்தில், நிதி அமைச்சர், ரவி கருணாநாயக்க ஆகிய நான், பின்வரும் கட்டளைகளை இடுகின்றேன்.

(1) 1993, மாச்சு 26 ஆந் திகதியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் இல. 759/15 இல் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களுக்கான கொடுப்பனவு தொடர்பில் வழங்கப்பட்ட விலக்கானது இரத்துச் செய்யப்படுவதற்கு ;

(2) இவ்வுத்தரவு வழங்கப்படும் திகதியில் வெளிநாட்டில் வைத்திருக்கப்படும் அத்தகைய ஏதேனும் கொடுப்பனவினை 2016, மே 01 ஆந் திகதிக்கு பிந்தாமல் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவதற்கும் ; அத்துடன்

(3) இவ்வுத்தரவு வழங்கப்படும் திகதியன்று அல்லது அதற்கு பின்னர் பெற்றுக்கொண்ட ஏதேனும் அத்தகைய கொடுப்பனவினை பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்ட திகதியிலிருந்து 90 நாட்களுக்குள் இலங்கைக்கு திருப்பி அனுப்புதல் வேண்டும்.

ரவி கருணாநாயக்க,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு,
2016, ஏப்பிறல் 01.

4- 1028




இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.